21st March 1964]

கனம் திரு. பூ. கக்கன் : நம் அரசாங்கத்தைப் பொறுத்தவரை அப்படிப்பட்ட ஆர்கனைசேஷன் கிடையாது. மத்திய அரசாங்கம்தான் ஏற்பாடு செய்கிறார்கள். அவர்கள் அங்கங்கே பரிசோதனை செய்து பார்த்து எந்த இடத்தில் மணிக்கு 20 ஆயிரம் காலனுக்கு மேல் தண்ணீர் கிடைக்கும் என்று தெரிகிறதோ அங்கே இதை எற்பாடு செய்கிறார்கள்.

திரு. செ. மாதவன் : இந்தத் திட்டத்தின்கீழ் பாசன வசதி பெறுகிற நிலங்களுக்கு பாய்ச்சப்படும் நீருக்குத்தான் வரி போடுகிறார்கள். இது விவசாயிகளுக்கு மிகவும் அனுகூலமாக இருக்கிறது. இந்த அடிப்படை யிலேயே பொதுக் கிணறுத் திட்டத்தின் கீழும் வரி விதிக்க நம் அரசாங்கமும் ஆலோசிக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அப்படி இல்லை. இந்தத் திட்டத்தின்கீழ் ஏக்கர் ஒன்றுக்கு 123.75 ரூபாய் வரியாக வசூலிக்கப்படுகிறது.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : எந்த அடிப்படையில் இந்தத் திட்டம் தேர்ந்தெடுக்கப்படுகிறது ? sub-soil குறைவான இடங்களை காண்பித்தால் அங்கே போதுமான தண்ணீர் கிடைக்குமா கிடைக்காதா என்பதை பரிசோதனை செய்து பார்க்க அவர்கள் முன்வருவதில்லை. ஆகவே, எந்த அடிப்படையில் நிலத்தை தேர்ந்தெடுத்து பரிசோதனை செய்கிறார்கள் ?

கனம் திரு. பூ. கக்கன் : நான் முன்பே சொன்னேன். மணிக்கு 20 ஆயிரம் காலன் கிடைக்கக்கூடிய இடமாகப் பார்த்து தேர்ந்தெடுக்கிறார்கள்.

திரு. செ. மாதவன் : நம்முடைய மாநில அரசாங்கத்திடம் பொதுக் கிணறுத் திட்டம் இருக்கிறது. இந்தக் குழாய்க் கிணறு திட்டத்தை இவர்களும் மேற்கொள்ளுவார்களா ? இதனால் விவசாயிகளுக்குச் செலவு குறையாதா ?

கனம் திரு. பூ. கக்கன் : நான் முன்பே சொன்னேன். இந்தத் திட்டம் மத்திய அரசாங்கத்தினுடையதுதான். இந்த ஆர்கனைசேஷன் நம்மிடம் இல்லை. மேலும் இதன்மூலம் செலவு ஜாஸ்தியாகத்தான் இருக்கும்.

திரு. இரா. நாராயணன் : இந்தத் திட்டத்தின் அடிப்படையில் உடையார்பாளையம் வட்டம், சன்னாசிநல்லூர் கிராமத்தில் குழாய்க் கிணறு அமைக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இந்தத் திட்டத்தை ராமநாதபுரம், பரமக்குடிக்கு இடையில் பரீட்சார்த்தமாக ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : இவர்கள் எந்த அடிப்படையில் குழாய்க் கிணறு தோண்ட இடத்தைத் தேர்ந்தெடுக்கிறார்கள் என்று நான் கேட்டேன்.

கனம் திரு. பூ. கக்கன் : A well should supply 20,000 gallons of water per hour for a period of 20 years. இதைப் பொறுத்துத்தான் செய்கிறார்கள்.

திரு. செ. மாதவன் : குழாய்க் கிணறு திட்டங்களை எந்த இடத்தில் கனிப்பொருள்கள் கிடைக்கிறது என்று சொல்கிறார்களோ அங்கேதான் மேற்கொள்ளுகிறார்கள் என்று சொல்லப்படுகிறதே. இதுபற்றி எங்கெங்கே குழாய்க் கிணறுகளை வைக்கலாம் என்பதையாவது ஆராய்ச்சி பண்ணி மத்திய அரசுக்கு சொல்ல நம் அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : நம் அரசாங்கத்திடம் அத்தகைய ஆர்கனைசேஷன் இல்லையென்று சொல்லிவிட்டேன். அவர்கள்தான் எங்கெங்கே தண்ணீர் கிடைக்கும் என்று பார்த்து முடிவு செய்ய வேண்டும்.

திண்டிவனத்தில் சப்-கோர்ட்டு

* 359 கேள்வி.—**திரு. கோ. ராஜாராம் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திண்டிவனத்தில் சப்-கோர்ட்டு ஒன்றைத் திறக்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

[21st March 1964

(இ) ஆமெனில், அவ்விஷயம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Taxis and auto-rickshaws in Madurai

*360 *Q.*—Sri C. SRINIVASAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to introduce meter system for taxis and auto-rickshaws in Madurai City?

The Hon. Sri R. VENKATARAMAN : Under the Madras Motor Vehicles Rules, taxis and auto-rickshaws plying in the mofussil should be fitted with either taxi-meters or milo-meters. In Madurai City, all the taxis are fitted with mile-meters and there are auto-rickshaws.

திரு. வி. எஸ். மணி: சென்னை நகருக்கு அடுத்தபடியாக மதுரை மாநகர் ஜனத்தொகையிலும், இதர வகையிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. அங்கு டாக்ஸி போன்ற வாகன வசதிகள் சரியாக இல்லை. அந்த நகரத்திற்கு டாக்ஸி வசதிகளை ஏற்படுத்த அரசினர் ஏதாவது வழி வகைகளை மேற்கொள்ளுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சமீபத்தில் போக்குவரத்து இலாகா மான்ய விவாதம் நடந்தபோதுகூட நான் குறிப்பிட்டுச் சொன்னேன். யார் வேண்டுமானாலும் டாக்ஸி ஓட்டலாம். எந்தவிதமான ரெஸ்ட்ரிக்ஷனும் இல்லாமல் டாக்ஸி விட அனுமதி வழங்கப்படும் என்று சொன்னேன். டாக்ஸி விடவோ, ப்ளீட் வைத்து நடத்தவோ முன் வருவது பொது மக்களுடைய கடமை என்று நினைக்கிறேன்.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, சென்னை நகரில் மட்டும் தான் மீடர் பார்த்து டாக்சிக்கு பணம் கொடுப்பது இருக்கிறது. மற்ற இடங்களில் டாக்சிக்காரர்கள் கேட்ட தொகை கொடுக்கவேண்டியதாக இருக்கிறது. இந்த மீடர் வைத்து சார்ஜ் வாங்கும் முறையைப் பரவலாக ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த உத்தரவுதான் போட்டு இருக்கிறோம் என்று சொன்னேன்.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—ADJOURNMENT MOTION *re* : LEAKAGE OF S.S.L.C. EXAMINATION QUESTION PAPERS.

Mr. SPEAKER : The Leader of the Opposition has given notice of an adjournment motion. It runs as follows :—

'The question papers for S.S.L.C. Government Examination conducted in March 1964, were leaked out even before the date of examination. The Education Department is responsible